பக்கங்கள் [illegible]

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6=00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 29 திங்கட்கிழமை (12-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 78

# கொழும்பைப் பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்திடம்!

### மாஹோ வந்தது

குடா நாட்டு மக்களுக்கான 5 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய், ப. நே. கூ. சங்கங்களுக்கான உணவுப் பொருள்கள் மற்றும் அடையாள அட்டைகள், உணவு முத்திரைகள் ஆகியவற்றுடன் 'மாஹோ' கப்பல் நேற்று பருத்தித் துறைக்கு வந்து சேர்ந்தது. பொருள் இறக்கும் பணி நேற்றே ஆரம்பமானது.

## மேஜர் ஜெனரல் நமுனி தலைநகரின் தளபதி

கொழும்பு, பெப்ரவரி 12

கொழும்பு மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட பெரும் வெடிகுண்டுத் தாக்குதலை அடுத்து தலைநகரைப் பாதுகாக்கும் பொறுப்பை பொலீஸாரிடம் இருந்து மாற்றி இராணுவத்திடம் கையளிப்பது என்று ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருக்கின்றது.

இதனை அடுத்து தலைநகரின் பாதுகாப்பை இராணுவத்தின் 12 ஆவது பிரிகேட் பொறுப்பேற்கவுள்ளது. மேஜர் ஜெனரல் ஜாலியா நமுனி கொழும்பின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தளபதியாகப் பணிபுரிவார்.

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் கடந்த வாரம் கூடி கொழும்பின் பாதுகாப்பை இராணுவத்திடம் கையளிப்பது பற்றிய முடிவை எடுத்தனர் என்றும் —

இதனையடுத்து இந்த முடிவை ஸ்ரீலங்கா அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது என்றும் —

கொழும்பில் செய்தி ஏஜென்ஸிகள் பலவும் தகவல் வெளியிட்டன.

*பொலீஸ் நிலையங்கள் இராணுவத்தின் கீழ்*

அரசின் புதிய முடிவின் படி —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 31 தற்கொலைப் படைப்பிரிவுகள் தலைநகருக்குள் ஊடுருவலாம்!

விடுதலைப் புலிகளின் சுமார் முப்பத்தியொரு தற்கொலைப் படைப் பிரிவுகள் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகக் கிடைத்துள்ள உளவுத் தகவல்களை அடுத்தே—

தலைநகரின் பாதுகாப்பை இராணுவத்திடம் ஒப்படைப்பது என ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இந்த உளவுத் தகவலைத் தொடர்ந்து—

ஜனாதிபதி, முக்கிய அமைச்சர்கள், படைத் தளபதிகள் மற்றும் அதிகாரிகளின் இல்லங்களைச் சுற்றி என்றுமே இல்லாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ-7)

### இராணுவம் பொறுப்பேற்றால்

## தமிழர்களுக்கு எதிரான அராஜகம் தலைநகரில் மேலும் தீவிரமாகலாம்

கொழும்பு, பெப். 12

கொழும்பின் பாதுகாப்பு இராணுவத்திடம் ஒப்படைப்பது என்ற முடிவு —

1988 - 89 ஆம் ஆண்டுகளில் தெற்கில் ஜே. வி. பி. காலத்தில் இடம் பெற்ற பயங்கர யுகம் மீண்டும் வரலாம் என்பதைக் காட்டுவதாக செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே. வி. பியை அடக்குவதற்காக, தென்னிலங்கையில் சிவில் நிர்வாகம் இராணுவத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதும் —

கூட்டுப்படைத் தலைமையகம் உருவாக்கப்பட்டதும் —

அவ்வேளையில் ஜே. வி. பி. யுடன் தொடர்புள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு, சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டு, அவர்களின் சடலங்கள் வீதிகளில் எரிக்கப்பட்டு அல்லது ஆறுகளில் வீசப்பட்டு அல்லது பெரும் புதை குழிகளில் ஒன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஆஸி., மேற்கிந்தியா வராததால்

## இந்திய - பாக். கூட்டு அணி காட்சி ஆட்டத்துக்கு வரும்

கல்கத்தா, பெப். 12

உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஸ்ரீலங்காவில் நடைபெறும் — ஸ்ரீலங்கா அணிக்கு எதிரான — ஆட்டங்களில் பங்குபற்றுவதில்லை என ஆஸ்திரேலிய, மேற்கிந்திய அணிகள் தீர்மானித்திருப்பதை அடுத்து, அந்த ஆட்டங்களில் ஸ்ரீலங்கா வெற்றி பெற்றது என அறிவிப்பது என்று போட்டி ஏற்பாட்டுக்குழு முடிவு செய்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் தீவிர செயற்பாடு வடக்கு-கிழக்கில் பாதிப்படையும்

கொழும்பு, பெப். 12

கொழும்பைப் பாதுகாப்பது போன்ற — பொலீஸாருக்குரிய — சிவில் நிர்வாகப் பணிகளை இராணுவத்திடம் ஒப்படைப்பதால் அவர்கள் வடக்கு - கிழக்கில் தீவிரமாக செயற்படுவதில் பிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு.

— இவ்வாறு ஏ. எவ். பி. செய்தியாளர் அமால் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அரசின் புதிய முடிவுக்கு இணங்க —

பொலீஸ், கடற்படை, விமானப் படை, இராணுவம் ஆகிய நான்கு பிரிவுகளும் இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரின் கீழ் கொழும்பின் பாதுகாப்பு விடயத்தில் ஈடுபடுத்தப்படும்.

இது வடக்கு - கிழக்குப் போரில் படையினரின் தீவிர செயற்பாட்டை பாதிக்கச் செய்யும்.

பொலீஸ் போன்று அவ்வ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## களத்துக்கு வராமலேயே கால் இறுதிக்கு ஸ்ரீலங்கா!

கல்கத்தா, பெப். 12

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் களத்தில் ஒரு பந்தைக் கூடச் சந்திக்காத நிலையில் கால் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெறும் நிலையை ஸ்ரீலங்கா அணி எட்டியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய அணிகளுக்கு எதிரான ஆட்டங்களின் ஸ்ரீலங்கா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டதால் —

சுற்றுப் போட்டியின் ஒரு பிரிவிலிருந்து கால்இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறுவதற்கு பெரும்பாலும் தேவையான 4 புள்ளிகளை ஸ்ரீலங்கா பெற்றுவிட்டது (உ-3-6-7)

## கெரில்லா யுக்தி பொறிக்குள் அரசு!

அரசையும், மக்களையும்— ஒருவரிடமிருந்து மற்றவரை — பிரிப்பது கொரில்லாப் போரின் உத்தியாகும். கொழும்பு நகரின் பாதுகாப்பை இராணுவத்திடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்ததன் மூலம் இந்த உத்திக்கு அரசு பலியாகியிருக்கின்றது.

— இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் பிரபல பாதுகாப்பு விமர்சகர் இக்பால் அத்தாஸ்.

தற்போதைய அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் இராணுவம் பொலீஸ் கடமைகளை ஆற்ற முடியும். அந்தச் சட்ட விதிகளின் கீழேயே இந்த முடிவை அரசு எடுத்திருக்கின்றது.

ஆனால் இந்த முடிவினால் பொதுமக்களுக்கு அசௌகரியமும், நெருக்கடியும் ஏற்படும். இதனால் அரசுக்கும், மக்களுக்கும் இடையே இடைவெளி அதிகரிக்கும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### போரில் காயமடையும்

## சிப்பாய்களுக்கு சிகிச்சை தர அமெ.டாக்டர் குழு வருமாம்

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் காயமுறும் படையினருக்கு சிகிச்சை அளிக்க அமெரிக்காவில் பணிபுரியும் ஸ்ரீலங்கா டாக்டர்கள் குழு முன்வந்துள்ளது.

டாக்டர் ஜிப் குனவர்த்தனா இத்தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்தினவுக்கும் அறிவித்துள்ளார்.

நரம்புச்சிகிச்சை, பிளாஸ்ரிக் சிகிச்சை, முழங்கால் மூட்டு சிகிச்சை, முள்ளந்தண்டு சிகிச்சை ஆகியவற்றை அமெரிக்காவில் இருந்து வரும் ஸ்ரீலங்கா டாக்டர்கள் மேற்கொள்ளவுள்ளனராம். (உ-3)

## புத்தூரில் வியாழனன்று படையினரிடம் பிடிபட்டவர் சனியன்று விடுவிப்பு!

மந்திகை, பெப். 12

புத்தூர் கிழக்கு குருநாதர் கோவிலடியில் இராணுவத்திடம் பிடிபட்ட ஒருவர் இரண்டு நாள் கழித்து மீண்டும் அதே இடத்தில் விடுவிக்கப்பட்டார்.

புத்தூர்கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து மட்டுவிலில் வசிக்கும் பூசகரான சரவணை [illegible] பிடிபட்ட பின்னர் விடுவிக்கப்பட்டவராவார்.

மட்டுவிலில் இருந்து புத்தூர் கிழக்கில் உள்ள தமது குருநாதர் கோவிலுக்கு, பூசை வைப்பதற்காக கடந்த வியாழக்கிழமை அங்கு சென்று பூசை முடித்து விட்டுத் திரும்பிய போது சொக்கத்திடல் என்ற இடத்தில் இராணுவத்திடம் பிடிபட்டதாகக் கூறினார்.

தாம் மாதத்தில் இரண்டு மூன்று தடவைகள் சென்று கோவிலுக்குப் பூசை வைத்து விட்டு வருவது வழக்கம் என்றும் அவர் சொன்னார்.

இராணுவத்தினர் தம்மை இருநாள்கள் விசாரணைக்குட்படுத்தியபின் கடந்த சனிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய, சொற்ப காலமே பாவித்த 'லுமாலா' ஆண்களுக்குரியது, 'ஏசியா' மகளிருக்குரியது, புதிய பாவிக்காத 'யமஹா' ஜெனரேற்றர் 600A. தொடர்புகொள்ளவும். வே. வீ. இராமநாதன், பாக்கிய பவனம், கல்லூரி வீதி, பருத்தித்துறை.
(40131)

A-40 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. நல்லையா, (நெசவு சங்கம் அருகில்), மட்டுவில் வடக்கு, சந்திபுரம், சாவகச்சேரி.
(40642)

## தேவை

தும்புத்தடி, விளக்குமாறு, கயிறு தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்கள் இருபாலாரும் தேவை. சம்பளம் மற்றும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும். வே. மகேஸ்வரன், பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை. (40127)

## காணி தேவை

சாவகச்சேரியின் 2 மைல் சுற்றாடலில் காணி தேவை. தொடர்பு: கே. ஏ. இன்ஜினியர்ஸ், மே/பா மு. வைத்தீஸ்வரன், பெரிய மாவடி, சாவகச்சேரி. (40635)

## தவறிவிட்டது

நா. வள்ளியம்மை 275940623 V, கெ.பாக்கியம் 578261125 X ஆகிய இரு அடையாள அட்டைகள் இந்துக்கல்லூரிக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. எடுத்தவர்கள் உதயன் மரக்காலை, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும்.
[40643]

## (O/L) MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 29 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், C/o. K. கதிரவேலு, வேம்பிராய் வீதி, காளிகோவிலடி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி
[40630]

## கணணி வகுப்புக்கள்

பிரத்தியேக கணணி வகுப்புக்கள் ஆரம்பம்: 10-2-96 / 14-2-96— 9-00A.m.(Basic, Pascal, C++, dBASE III +, Lotus) தொடர்புகளுக்கு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி, நெல்லியடி. (40124)

## கலாசாலை 19 முதல் இயங்கும்

சாவகச்சேரி, பெப். 12

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை எதிர் வரும் 19 திகதி முதல் பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் தற்காலிகமாக இயங்க ஆரம்பிக்கும் என்று கலாசாலை அதிபர் திருமதி சி. இராமநாதன் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திற்குப் பின்னர் இயங்காத இக்கலாசாலையின் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஊழியர்கள் அனைவரையும் மேற் குறிப்பிட்ட திகதியில்சமுமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு விடுதி வசதி செய்து தரப்படும் என்று அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-3)

---

# அறிவித்தல்

இத்தால் சகலருமறிக, எனது கட்சிக்காரி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி இராசலிங்கம் கைம்பெண் டெய்சி கமலாம்பிகையின் அறிவுறுத்தலின் பிரகாரம் அறியத் தருவது:-

மட்டுவில் தெற்கு இறையில் அமைந்துள்ள ''அறுமர்வளவு'' என்னும் ஆதனமும் அதிலமைந்துள்ள கல்வீடு வளவு, பிரயோசன வருமானங்கள் யாவும் எனது கட்சிக்காரி டெய்சி கமலாம்பிகைக்கே சொந்தமென்பதையும், குறித்த ''அறுமர்வளவு'' என்னும் ஆதனத்தில் அமைந்துள்ள வீட்டில் குடியிருக்கும் உரிமை மட்டுமே இவ்வாதனத்தில் குடியிருக்கும் மட்டுவில் தெற்கு, வேலாயுதபிள்ளை, திருநாவுக்கரசு என்பவருக்கு உண்டென்றும், இவ்வுரிமைகள் யாவும் குறித்த வேலாயுதபிள்ளை திருநாவுக்கரசுவும் ஒரு கட்சிக்காராகவிருந்து எழுதி நிறைவேற்றிய 20112ஆம் இலக்க நன்கொடை உறுதியில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளதென்றும் அறியத் தருவதோடு, இவ்வுரிமைகள் பற்றி அறியாது குறித்த வேலாயுதபிள்ளை திருநாவுக்கரசுவுடன் எவரும் இவ்வாதனத்தில் அமைந்துள்ள வீடு வளவு மற்றும் பிரயோசன வருமானங்களைகள் தொடர்பாக ஈடு, குத்தகை, ஒற்றி போன்ற எத்தகைய ஒப்பந்தங்களையும் செய்து கொள்ள வேண்டாமென இத்தால் பகிரங்க அறிவித்தல் விடப்படுகின்றது.

இவ்வெச்சரிக்கையை மீறிக் குறித்த திருநாவுக்கரசுவுடன் ஏதாவது ஒப்பந்தங்கள் செய்து, ஆதனத்துள் பிரவேசிக்கவோ, குடியிருக்கவோ அல்லது பிரயோசன வருமானங்களை எடுக்கவோ முற்பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் அறியத்தருகிறேன்.

த. வேலாயுதம்
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்

(40638)

---

நன்னெறிக்கு வித்திட்ட எம் அதிபராம்
**சந்திரசேகரம்பிள்ளைக்கோர்**

# வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகாய் எமக்களித்து
நாளும் பொழுதும் நன்நெறி பரப்பிய
துங்கக் கரிமுகத்தோன் தந்தைபாம் எம் அதிபர்
சங்கத் தமிழ் வளர்த்த சந்திரரே வாழியவே.

யா/ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி
தமிழ்ச்சங்கம்.

(40731)

---

# இடமாற்றம்

யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்து தற்போது
சாவகச்சேரி பழைய பொலீஸ் வளாகத்தில்
அமைந்திருக்கும்

**கண்மணி களஞ்சிய**

இரும்பு ஸ்தாபனத்தினர்

பழைய கழிவு இரும்பு வகைளுகம், மற்றும் அலுமினியம் பித்தளைப் பொருள்களும் கொள்முதல் செய்யப்படும் என்பதை வாடிக்கையாளருக்கும் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றனர்.

கண்மணி களஞ்சியம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(40639)

---

# 90-ம் நாள் நினைவலைகள்

**11 — 02 — 96**

யா/வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியர்

## அமரர் ந. ஏரம்பமூர்த்தி

மறைவு:- 14—11—1995

கடமையே கண்ணியமாய்
சித்திரமே கற்பிக்கும் எண்ணமதாய்
சித்திரம் போல வந்து அனைவரையும் மகிழவைக்கும்
சிறுபிள்ளையாய் எம்மிடையே இருந்து - பின்
இடம் பெயர்ந்து வந்து - நண்பரிடை இருந்து
அளவளாவி மகிழ்ந்து - வன்னிப் பெரு நிலம்
தஞ்சமென்று சென்று இறந்த செய்தி கேட்டு - நாம்
மீளாத் துயரில் துன்புற்றோம் ஐயா
உன் உயிர் அமைதி பெற - உன்குடும்பத்
துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி
இறைவனைத் துதிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வட்டு. இந்துக் கல்லூரி

(40730)

---

தனியார் கல்வி நிறுவனங்களுக்கான

# விசேட கலந்துரையாடல்

விடயம்: மீள வகுப்புக்கள் ஆரம்பிப்பது தொடர்பானவை

இடம்: யா/மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை (மோகனதாஸ் வாசிகசாலை ஒழுங்கை)

திகதி: **12-02-1996** திங்கட்கிழமை மாலை 4 மணி

குறிப்பு; இக் கலந்துரையாடலுக்கு மாவட்ட மற்றும் கோட்ட நிர்வாகசபை உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

நன்றி.

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினர்

(சி/4025)

---

**யாழ். பல்கலைக்கழக**

சகல உத்தியோகத்தர்களுக்கான

# அறிவித்தல்

நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் யாழ்.பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் சகல கல்விசார், கல்விசாரா உததியோகத்தர்கள் அனைவரும் எதிர்வரும் 15 - 02 - 96 அன்று தொடக்கம் கிளிநொச்சி விவசாய பீடத்தில் அல்லது சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் பல்கலைக்கழக அலுவலகங்களில் அல்லது கைதடியில் உள்ள சித்த மருத்துவத் துறையில் கடமைக்குச் சமுகம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகுந்த விடுப்பை பெறாது முன்னறிவித்தல் இன்றி மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் சமுகம் கொடுக்காத உத்தியோகத்தர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் 1996 - பெப்ரவரி மாதத்தில் இருந்து வழங்கப்பட மாட்டாது.

துணைவேந்தர்

(சி-2968)

---

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## அம்பிகாதேவி ஜெகநாதன்

தெல்லிப்பழை, மகாதனையை பிறப்பிடமாகவும், 17, கைலாசபிள்ளையார் கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பிகாதேவி ஜெகநாதன் 10 - 02 - 1996 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் அம்பலவாணர் ஜெகநாதன் [இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை] அவர்களின் அன்பு மனைவியும், வாசுகி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயசங்கரின் [விரிவுரையாளர், கிழக்குப்பல்கலைக்கழகம்] அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அப்பர்சுவாமி —சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், உடுவிலைச் சேர்ந்த அம்பலவாணர்— இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், திருமதி இராஜலட்சுமி பாலசுப்பிரமணியம் [ஆஸ்திரேலியா], திரு அண்ணாமலை, திரு. இராமநாதன் [கனடா] திருமதி கனகாம்பிகை சேதுராசா, திரு கோபாலகிருஷ்ணன் [முகாமையாளர், மக்கள் வங்கி கன்னாதிட்டி [சாவகச்சேரி]] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம் [ஆஸ்திரேலியா], திருமதி நாகேஸ்வரி இராமநாதன், திரு இராமநாதன் [இங்கிலாந்து], திரு. யோகநாதன், திருமதி இரட்னேஸ்வரி பாலசிங்கம் [நூலகர், பொது நூலகம், சுன்னாகம்] ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சுதர்சன் (மகன்)
கோபாலகிருஷ்ணன் (தம்பி)

தற்போதைய முகவரி:-
மே/பா C. T. B செல்லையா,
வரணி வீதி, (வேம்பிராய் சந்தி),
மந்துவில் கிழக்கு, மந்துவில். (40734)

## மாரிமுத்து கருணாகரன்

தொல்புரத்தை பிறப்பிடமாகவும், பொன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து கருணாகரன் நேற்று 11 - 2 - 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், வாமதேவா தம்பதிகளின் மருமகனும், ஞானசக்தியின் (ஹோமியோபதி டாக்டர்) அன்புக் கணவரும், கிரிதரன் (பிரான்ஸ்), ஸ்ரீதரன் ஆகியோரின் தந்தையும், மா. சம்மந்தமூர்த்தி, மா. இராசலிங்கம், வி. இராசலட்சுமி, ச. மகாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-2-96) காலை 9 மணிக்கு சுருக்கெழுத்து பயிற்சி நிலையம், முருகன் கோவிலடி, நெல்லியடியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
தா. சிவராஜா
(மச்சான்)
(இலங்கை வங்கி — காங்கேசன்துறை கிளை)

(40736)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வீட்டைச் சுட்ட ஒட்டப்பம்!

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் அதன் நிதித்துறை இயக்கத்துக்கும் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் அனந்தம். வங்கிக் கட்டடத்துக்கும், அங்கிருந்த தங்கம், பணம் மற்றும் முக்கிய ஆவணங்களுக்கும் உண்டான சேதங்கள் பற்றிய தகவல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற வேளையிலேயே, மத்திய வங்கி,குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சம் அந்த வங்கியின் பணியாளர்கள் மத்தியிலும், பாதுகாப்புப் படை வட்டாரத்திலும் நிலவியதாம்.

அதனால், மத்திய வங்கிக்கு மட்டுமன்றி, கொழும்பு நகரம் முழுவதிலுமே முன்னர் எப்போதும் இல்லாத வாறுநீக்கல் இல்லாத விசேட பாதுகாப்புக் கவசம் போடப்பட்ருந்தது. ஆனால் பொலீஸ் நிலையங்கள். இரண்டுக்கு அருகில் குண்டு வெடிப்புக்கான ஒத்திகையை நடத்தும் அளவுக்கு. அதில் ஈடுபட்டவர்கள் கொழும்பின் பாதுகாப்புக் கவசத்தை துளைத்துச் சென்று தமது காரியத்தைச் சாதித்திருக்கிறார்கள்!

குண்டுவெடிப்பினால் உண்டான பாதிப்புகள் ஒரு புறமிருக்க அங்கிருந்த பணம், தங்கம் ஆகியவற்றைச் சூறையாடுவதில் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் எத்துணை ''அக்கறையாக'' இருந்தனர் என்ற தகவல்கள் இப்போது நிறைய வெளிவந்துகொண்டிருக்கின்றன.

எரிகிற வீட்டில் பிடுங்கிய மிச்சத்தைத் தத்தமது தனிப்பட்ட செல்வத்தைப் பெருக்குவதற்கு கொண்டு போய்ச் சேர்த்துள்ளார்கள்! சாக்கு சாக்காக பணக்கட்டுகளை கொள்ளை இட்டுள்ளார்கள்!

இது தமிழர்களிடம் சூறையாடிக் கண்ட ருசியின் விளைவு. தமிழ் மக்களைக் கொன்றும், இம்சைப்படுத்தியும் துன்புறுத்துவதைவிட, அவர்களின் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் போதெல்லாம் தமிழ் மண்ணில் உள்ள சொத்துக்களைச் சூறையாடுவதே ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் சொந்த நோக்காக இருந்தது. அவ்வாறு சூறையாடும் சொத்துக்களை உயர் அதிகாரிகள் தொடக்கம் சிப்பாய்கள் வரை பங்கிட்டுக் கொள்வார்கள்.

சித்திரமும் கைப்பழக்கம் அல்லவா? தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடிய கைகள் மத்திய வங்கியில் புகுந்து விளையாடியுள்ளன!

தமிழர்களின் சொத்துக்கள் பாதுகாப்புப் படையினரால் சூறையாடப்படுகின்றன என்பதைச் சிங்கள அரசாங்கத்தினரும் அமைச்சர்களும் மறுத்து வந்தார்கள். அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முனையாது மேலும் தூண்டுதல் செய்தனர். தமிழர்களின் சொத்துத்தானே, பரவாயில்லை, என்ற போக்கைக் கடைப்பிடித்தனர். இப்போது தன் வினை தன்னைச் சுட்டிருக்கிறது!

மத்திய வங்கியில் மீட்புப் பணிக்காகச் சென்ற பொலீஸார் மற்றும் படையினர் அங்கு கொள்ளையடித்தார்கள் என்பதனை தகவல் துறை அமைச்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார்! ஒட்டப்பம் வீட்டைச் சுட்டிருக்கிறது!

# ஈழத்தமிழர் நிவாரணப் பணிக்கு நோர்வே மக்கள் தாராள உதவி

ஒஸ்லோ, பெப். 12

இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்கு உதவுவதற்கென, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நோர்வேயில் நடத்திய நிதி திரட்டும் இயக்கத்துக்கு அந்நாட்டு மக்கள் தாராளமாக பணம் அன்பளிப்புச் செய்தனர்.

இம்மாத ஆரம்பத்தில் இரண்டு நாள்களுக்கு இந்த நிதி திரட்டும் இயக்கம் நோர்வேயில் பல நகரங்களிலும் நடத்தப்பட்டதாக ''அவ்ரன் போஸ்ரன்'' என்ற அந்நாட்டுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது அனுதாபம் கொண்ட மக்கள் ஆயிரம் ஆயிரமாக நோர்வேப் பணத்தை அன்பளிப்பாக வழங்கியதாகவும் அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட நிதி திரட்டும் இயக்கத்தின் போது, இலங்கை நாணயப் பெறுமதிக்கு 8 லட்சம் ரூபா முதல் பத்து லட்சம் ரூபா வரை நோர்வே நாட்டு மக்கள் பண உதவி நல்கினார்கள் என்றும் அந்தப் பத்திரிகை சுட்டிக் காட்டியது.

(அ)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996 02-12 காலை

- ★ 7-00 — ஆரம்பம்
- ★ 7-02 —மாவீரர் வணக்கம் அதனைத் தொடர்ந்து
- ★ 7-30 வரை நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — அறிவிப்புகள் தொடர்ந்து 8.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

1996-02-12 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8-02 — உயிர்ப்புக்கள்
- ★ 8-10 — கட்டுரை
- ★ 8-20 — கணப் பொழுது
- ★ 8-30 — செய்திகள்.
- ★ 8-40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்

## கிழக்கில் வெள்ளம்

தற்போது கிழக்கில் பெய்து வரும் கடும் மழையினால் மட்டக்களப்பின் பல பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று அகதி முகாம்களும் அம்பாறையில் இரண்டு அகதி முகாம்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. (உ-7)

### தமது கோரிக்கையை வலியுறுத்தி

## ஒரே நாளில் 50,000 தந்தி அனுப்ப அதிபர்கள் முடிவு

உத்தேச பாடசாலை அதிபர் சேவையை உருவாக்கக் கோரி ஒரே தினத்தில் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் 50ஆயிரம் தந்திகளை கல்வி, உயர்கல்வி அமைச்சருக்கு அனுப்புவதென அகில இலங்கை பாடசாலை அதிபர்களின் சங்கம் தீர்மானித்துள்ளதாக அதன் செயலாளர் ஏ. ஜி. அகஸ்டின் பெரேரா தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 15ஆம் திகதி அமைச்சருக்கு தந்திகளை அனுப்புவதென நீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதங்களை வழங்குகிறது

### லோறன்ஸ் திலகர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 12

'பாகிஸ்தான் அரசு ஆயுதங்களை இலங்கை அரசுக்கு வழங்கிவருகிறது. இவை இந்தியாவுக்கு எதிரான செயல்களே'.

இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரமுகர் லோறன்ஸ் திலகர்.

ஜூனியர் விகடனுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

தென்பிராந்தியத்தில் இலங்கை அரசை இந்தியாவுக்கு எதிரான ஒரு சக்தியாக மாற்ற பாகிஸ்தான் துடிக்கிறது.

அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன என்றும் திலகர் கூறியுள்ளார்.

(இ 3)

## முக்கிய சந்தேக நபர் அவிசாவளையில் கைதாம்

கொழும்பு, பெப். 12

நியூட்டன் என்ற விடுதலைப் புலிகள் சந்தேக நபர் அவிசாவளையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பஸ்தரிப்பு நிலையத்தில் நின்று கொண்டிருந்த சமயம் அவர் கைது செய்யப்பட்டதாகவும் —

அவரிடம் இருந்து கிடைத்த தகவல் ஒன்றில் இருந்து அவிசாவளை புவத்பிட்டியாவில் மேலும் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் —

அத்துடன் அங்கிருந்து குண்டுத் தாக்குதலுக்கு கொழும்புக்கு வரவிருந்த லொறி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

வெடி மருந்து பொருள்களை பாதுகாப்பாக வைக்கக் கூடிய ரகசியப்பகுதி ஒன்று அந்த லொறியில் இருந்ததாகவும் கூறப்பட்டது. (இ-3)

### ஆலியின் நடவடிக்கை

## இலங்கை அரசாங்கத்தின் கௌரவத்துக்கு பலத்த அடி

### அரசியல் அவதானிகள் கருத்து

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நாட்டுத் தலைவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு ஆஸ்திரேலிய வீரர்களுக்கும் தரப்படும் என்று இலங்கை அரசு உறுதியளித்தும்கூட ஆஸ்திரேலியா கொழும்பில் விளையாட திட்டவட்டமாக மறுத்திருப்பது, இலங்கை அரசின் சுய கௌரவத்துக்கு விழுந்துள்ள பெரிய அடி என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

இச்சம்பவம் இவ்விரண்டு நாடுகளுக்கும் இடையே ராஜதந்திர யுத்தத்தையே உருவாக்கியுள்ளது.

ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஆதரவாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் பேசியிருப்பது, பிரச்சினையின் ஆழமான உண்மை நிலையை காட்டுகிறது என்று அரசியல் அவதானிகள் கருது[illegible]

(இ-3)

## நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அடையாள அவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கேட்டுள்ளது.

- ★ சிவலை சிவசம்பு — பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
- ★ சின்னத்தம்பி தவநாயகம் (இ.போ.ச)— மே/பா: பஞ்சநாதன், மாசியஞ் சந்தி, நீர்வேலி வடக்கு.
- ★ சின்னன் செல்லத்துரை — 38/09, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
- ★ சின்னத்துரை சண்முகநாதன்—41/08 செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
- ★ செல்லையா சுப்பிரமணியம் (இ. போ. ச), — தேவி இல்லம், குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு.
- ★ சரஸ்வதி இராஜேஸ்வரி பெனடிற் — இல 50, புதுவீதி, கொய்யாத் தோட்டம், சுண்டிக்குளி.
- ★ பொன்னு அழகரட்ணம் — கே. கே. எஸ் வீதி, 4ஆவதுமைல், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
- ★ சுவர்ண மாலினி சண்முகம் — நாவாலி தெற்கு மானிப்பாய்.
- ★ பாக்கியம் நடராசா — அச்செழு, நீர்வேலி, குளத்தடி.
- ★ வேலுப்பிள்ளை செல்லையா அல்லது மணி (மனைவி) அச்செழு, நீர்வேலி.
- ★ இராசம்மா இராசரத்தினம்—அச்செழு, நீர்வேலி
- ★ அற்புதமலர் முத்துவேலு—அச்செழு, நீர்வேலி
- ★ இலட்சுமி சின்னத்தம்பி — புத்தூர் மேற்கு.
- ★ இந்திராதேவி கோபாலசிங்கம்—புத்தூர் கிழக்கு.
- ★ சரசு செல்லத்துரை — புத்தூர் வடக்கு, புத்தூர்.
- ★ விமலா பாலசுப்பிரமணியம் — புத்தூர் மேற்கு.
- ★ ஆறுமுகம் நாகமுத்து — புத்தூர் வடக்கு, புத்தூர்.
- ★ கேதீஸ்வரன் ஞானதீபம் — மே/பா. வேலுப்பிள்ளை, புத்தூர் மேற்கு, புத்தூர்.
- ★ பாக்கியம் முருகேசு — நீர்வேலி வடக்கு.
- ★ வீரசிங்கம் கனகரட்ணம் அல்லது கருணாவதி கனகரட்ணம் — 47, அரசடிவீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
- ★ நடராஜா திசைநாதன் — மே/பா. செல்லத்துரை திருச்செல்வம், சண்டிலிப்பாய் வடக்கு.
- ★ தவமணிதேவி சிவசுப்பிரமணியம் — கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
- ★ மனோரஞ்சிதம் மகேஸ்வரன் — இணுவில் மேற்கு, இணுவில்.
- ★ சின்னப்பு கனகலிங்கம் — தேத்தாவிடை, ஏழாலை மேற்கு, ஏழாலை.
- ★ சிவபாதவிருதயர் மதியாபரணம் — 46, அம்மன் வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்.
- ★ சின்னத்தம்பி நடராசா — கொக்குவில் கிழக்கு.
- ★ சுப்பிரமணியம் ஞானானந்தா — புகையிரத நிலையம் வீதி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.
- ★ இராஜதுரை பாலசுந்தரம்—சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
- ★ கந்தையா தர்மலிங்கம் — இணுவில் மேற்கு.
- ★ வீரகத்தி இராசரத்தினம் — சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்
- ★ ஜெகதாம்பிகை மகேசன் — 231, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
- ★ சிவபாக்கியம் வீரசிங்கம் — ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
- ★ ஏகாம்பரம் ஜெயக்குமார் — 393, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
- ★ சிதம்பரி சுப்பிரமணியம் — மணி இல்லம், மாரீசன் கூடல், இளவாலை.
- ★ ஆறுமுகம் இரத்தினசபாபதி — சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.
- ★ ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் — சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி.
- ★ பாக்கியலட்சுமி விஜயரட்ணம் — 36, தேவாலய வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
- ★ இராசையா பாலசூரியர் அல்லது சந்திராதேவி — யோகராஜ் வீதி, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
- ★ அன்னபூரணம் நடராஜா — 125, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
- ★ முருகேசு சிங்காரம்—ஏழாலை கிழக்கு, ஏழாலை.
- ★ நாகர் நல்லையா—நவாலி தெற்கு, முருகமூர்த்தி கோவிலடி, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
- ★ புவனேஸ்வரி தர்மலிங்கம் — 26/01, 3ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
- ★ நாகமுத்து பத்மநாதன் — ''கற்பகுளை'', உடுவில், சுன்னாகம்.
- ★ நீலாம்பிகை அருமைராசா — சிறிலங்கா ஒழுங்கை, உடுவில், சுன்னாகம்.
- ★ சின்னத்துரை தாயுமாணவர் (அளவெட்டி அப்பர்) — மே/பா சி. மகேந்திரன், 2 ஆம் கட்டை, முரசுமோட்டை, பரந்தன்.
- ★ சொக்கலிங்கம் யோகேஸ்வரன் — இலங்கை வங்கி, கிளிநொச்சி.
- ★ கெங்காதேவி சின்னத்தம்பி — மோயியாவளவு, விக்னேஸ்வரா கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணவில்லை

காரைநகர் பண்டித்தாழ்வைச் சேர்ந்த

**அரியரத்தினம் தவேந்திரனை**

07-02-1996 புதன்கிழமையில் இருந்து காணவில்லை. நீலமும், கறுப்பும் சேர்ந்த சாரமும், வெள்ளைச் சேட்டும் அணிந்து சைக்கிளில் சாவகச்சேரி சென்றவர். மீசையுடைய சிவந்த மெல்லியவர். வயது 49. இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து கீழுள்ள விலாசத்திற்கு அறிவிக்கவும்.

அ. மீனாட்சி (தாயார்),
''கணேசபவனம்'',
கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(40133)

# இதய அஞ்சலி

பொன்னாலை

**அமரர் மா. கருணாகரன்**

வித்தியாசாலையின் குடும்ப உறுப்பினராய் விளங்கி தோன்றாத் துணையாக உழைத்த உத்தமருக்கு எம் அஞ்சலிகள்

அதிபர், ஆசிரியர்,
பெற்றோர், மாணவர்கள்.

யா/ பொன்னாலை
வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை,
சுழிபுரம்.

(40737)

# மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

## இளையதம்பி கனகசபாபதி

(இளைப்பாறிய விதானையார்/கிராம சேவையாளர்-யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிடியைச் சேர்ந்த திரு.இ. கனகசபாபதி கடந்த 07-02-96 புதன்கிழமை பருத்தித்துறையில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி இளையதம்பி, அன்னமுத்து தம்பதிகளின் (ஸ்தாபகர், யாழ். இளையதம்பி வித்தியாசாலை) சிரேஷ்ட புதல்வரும், அம்பிகை (ஆசிரியை) யின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (அருள் — லண்டன்), ஸ்ரீகரன் (பரன் — கிராம அலுவலர், செல்வாநகர், கிளிநொச்சி) வாணி (சோதி), தமிழ்ச்செல்வி (சாந்தி — லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், மனோகரி (லண்டன்), நிர்மலா, மகேஸ்வரன் (பங்காளர் - யாழ். ஈஸ்வர் கோப்பறேசன்), சிவநேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌரி அம்மா, தனலட்சுமி, பரமேஸ்வரி (ஈஸ்வரி), சங்கரநமசிவாயம் (தொலைத்தொடர்பு திணைக்கள இளைப்பாறிய அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரசன்னா, பிரதீப், நிரூபன், சாம்பவி, ஹரி, மேனகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இறுதிக் கிரியைகள் அன்னாரின் சகோதரியின் மகன் திரு. ச. மாகாதேவனின் (தேவு) பருத்தித்துறை, ஆத்தியடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 08 – 02 - 96 அன்று மாலை பருத்தித்துறை சுப்பர் மடம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை அறியத்தருகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் குறிப்பாக ஆத்தியடி மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மகன்
க. ஸ்ரீகரன் (பரன்)

கல்லூரி வீதி,
ஆத்தியடி,
பருத்தித்துறை.

(40130)

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் லூக்காஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

உடுவில், செபமாலைமாதா கோவிலைச் சேர்ந்த திருமதி பாக்கியம் லூக்காஸ் 11 – 02 - 96 காலமானார்.

இவர் திரு. தீ. லூக்காஸ் அவர்களின் மனைவியும், திருமதி ஜெனிற்றா அரசகுமார் அவர்களின் தாயாரும், திருமதி சிசிலியா பீற்றர், காலஞ்சென்ற வின்சென், திருமதி பிலோமினா பிரான்சிஸ், காலஞ்சென்ற திருமதி லில்லி நடராஜா, திருமதி எமிலி நவரட்ணம், பெனடிற், திருமதி அருளம்மா ஜோசேப், அல்பிறெட், திருமதி ஆகத்தா ஜேம்ஸ் ஆகியோரின் சகோதரியும், திரு. எஸ். பி. அரசகுமாரின் மாமியாரும், றூபகன், டிலான், காமினிற்றா ஆகியோரின் பேர்த்தியுமாவார். நல்லடக்கம் இன்று (12 – 02 - 96) திங்கட்கிழமை பி. ப. 2.30 மணிக்கு கச்சாய் வடக்கு புனித செபமாலை மாதா சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
தீ. லூக்காஸ்
(கணவன்)
''நசரேத்''
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

புனித செபமாலை மாதா கோவிலடி,
கச்சாய் வடக்கு, கொடிகாமம்.

(40733)

**2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்**

# நெடுந்தீவிலிருந்து 14 பேர் படகுகளில் தமிழகத்துக்கு!

சென்னை, பெப். 12

நெடுந்தீவிலிருந்து 14 ஈழத் தமிழர்கள் படகுகளில் நேற்று இராமேஸ்வரத்தை வந்தடைந்திருப்பதாகவும்—

இந்திய கடற்படையினர் இவர்களைப் பிடித்து கரையோரக் காவல்படையிடம் ஒப்படைத்ததாகவும் இந்திய வானொலி அறிவித்துள்ளது.

நெடுந்தீவில் தமிழ்க் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற மோதல்களை அடுத்தே இவர்கள் தமிழகத்துக்குப் புறப்பட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது, (உ-7)

# தாதியர் நியமனம்

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு புதிதாக 8 தாதிய உத்தியோகத்தர் நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த அக்டோபர் மாதம் தாதியர் பயிற்சிப் பரீட்சையில் சித்திபெற்ற எட்டுப் பேருக்குமே கடந்த 3-1-96 முதல் கிளிநொச்சி வைத்தியசாலையில் கடமை ஏற்கும்படி நியமனக் கடிதங்கள் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-15)

## தமிழர்களுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றாகப் புதைக்கப்பட்டு அராஜகங்கள் நிகழ்த்தப்பட்டதும் —

இவ்வேளையில் நினைவூட்டத்தக்கது என அச்செய்திளர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய அராஜகச் செயல்கள் விடுதலைப் புலிளை ஒழிக்கின்றோம் என்ற போர்வையில் கொழும்பு வாழ் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படலாம் என்றும் —

தலைநகரிலிருந்து தமிழர்களை ஒரேயடியாகத் துரத்துவதற்கு அரசு இந்த வழியை நாடியிருக்கலாம் என்றும்—

சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (உ-7)

## கொழும்பை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)]

கொழும்பு நகரின் சகல பொலீஸ் நிலையங்களும், பொலீஸ் அமைப்புகளும் இனி மேல் இராணுவத்தின் அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்கும்.

பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பின் பந்தோபஸ்து இராணுவத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர் இராணுவம் வாபஸ் பெறப்பட்டு அது பொலீஸாரிடம் மீண்டும் கையளிக்கப்பட்டது.

தற்சமயம் கொழும்பிலும், கொழும்பைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பொலீஸாரே பாதுகாப்புக்கு பொறுப்பாக உள்ளனர்.

கொழும்பில் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியாக நியமிக்கப்படும் ஜாலியா நமுனி இந்திய அமைதிப் படை யாழ்ப்பாணத்தில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த காலத்தில் யாழ். பிராந்தியத்துக்குப் பொறுப்பான ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரியாக இருந்தவர்.

பூநகரி இராணுவ முகாமில் கடமையாற்றிய இவர் பூநகரி முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்துகொழும்புக்கு அழைக்கப்பட்டிருந்தார், (உ-3-6-7)

# 30 கோடி வருடங்களுக்கு முற்பட்ட டைனோஸர் சிதைவுகள் இந்தியாவில் கண்டுபிடிப்பு!

புதுடில்லி, பெப். 12

பத்துக் கோடி முதல் முப்பது கோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனோஸர்கள் மற்றும் முக்கிய விலங்கு உயிரினங்களின் உடற்படிவுகள் அடங்கிய சிதைவுகள் (Fossils) இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பாலைவனப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வானொலி இத்தகவலை நேற்று வெளியிட்டது.

டைனோஸர்கள் மற்றும் அதன் மூதாதை விலங்குகள் மற்றும் மிகப்பழமை வாய்ந்த ஊர்வன வகைப் பிராணிகளினுடைய 'பொஸில்ஸ்' களே இரண்டு ஆர்வலர்களினால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

தென்னாசியாவில் இவ்வளவு பெருந்தொகையில் பொஸில்கள் ஒன்றாகக் கண்டு பிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது (உ)

# கையளிப்பு

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சியில் பாடசாலைகளில் தங்கியிருந்த 300 குடும்பங்களுக்கு குடிசைகளைக் கையளிக்கும் வைபவம் எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு 5 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ்—

மிருசுவிலில் கரம்பைக் குறிச்சியில் முதல் கட்டமாக அமைக்கப்பட்டுள்ள 300 வீடுகளே கையளிக்கப்படவிருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார். (உ-7)

## இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ஸ்ரீலங்காவில் நிகழவிருந்த ஆட்டங்களை ரத்துச் செய்வதால் ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்வதற்காக இந்திய — பாகிஸ்தான் வீரர்களைக் கொண்ட கூட்டு கிரிக்கெட் அணி ஒன்றை கண்காட்சி ஆட்டம் ஒன்றில் பங்குபற்றுவதற்கு ஸ்ரீலங்காவுக்கு அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இவ்வாட்டம் நாளை கொழும்பில் நடைபெறும்.

நேற்று முற்பகல் கல்கத்தாவில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் கூட்டத்தில் இம்முடிவுகள் எடுக்கப்பட்டன

நேற்று மாலை கல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் சுற்றுப் போட்டியின் ஆரம்ப வைபவம் சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றது.

சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டம் நாளை மறுதினம் அஹமதாபாத்தில் நடைபெறும். இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகள் இப்போட்டியில் பங்குபற்றும். (உ-6-7)

## புத்தூரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை அப்பகுதியில் கொண்டுவந்து விடுவித்தாக அவர் தெரிவித்தார்.

தன்னைப் பிடித்ததும் புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று தடுத்து வைத்து விசாரணை செய்ததாகவும் —

அவ்வேளை தமக்கு நாளுக்கு இரண்டு நேரம் பாண் உணவாக வழங்கப்பட்டதாகவும் —

அவர் தெரிவித்தார்.

விசாரணையில் தாம் பூசகர் என தெரிந்து கொண்டதும் — மீண்டும் அங்கே குடும்பத்துடன் வந்து குடியிருக்குமாறு தெரிவித்து — தன்னை படையினர் விடுவித்ததாகவும் அவர் கூறினார். (உ-15)

## கெரில்லா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பின் சிவில் நிர்வாகப் பொறுப்பும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படுவதால் இராணுவத்திற்கு பெரும் பிரச்சினைகள் உண்டாகலாம்; ஆளணி நெருக்கடி தோன்றும் — இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

அரசின் இந்த முடிவு மீண்டும் யுத்தம் கொழும்புக்கு வந்து விட்டதையே காட்டுவதாக பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-6)

## இராணுவத்தின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளவு இலகுவில் இராணுவம் ஊழல் மோசடியில் ஈடுபடமாட்டாது எனக் கருதி இத்தீர்மானத்தை அரசு எடுத்திருக்கலாம்.

அரசின் முடிவால் பொலீஸாருக்கு அதிருப்தி ஏற்படலாம்.

கொழும்பை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக பாசாங்கு செய்யும் செயற்பாடே இது. கொழும்பு மக்களை ஏமாற்ற அரசு முயற்சிப்பதாகப் படுகிறது — இவ்வாறு [illegible] குறிப்பிட்டார். (உ-6)

# மரண அறிவித்தல்

## கந்தவனம் காசித்தம்பி

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கத்தானையில் வசித்தவருமாகிய கந்தவனம் காசித்தம்பி 10 - 02 - 1996 இல் சிவபதமெய்தினார். இவர் காலஞ்சென்ற பசுபதியின் அன்புக் கணவரும், பேரம்பலம் [இளைப்பாறிய கிராம அலுவலர்—கனடா], குமாரசாமி [கனடா], நாகம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகம்மா [கனடா], பாக்கியம் [கனடா], ஞானசுந்தரம், சுப்பிரமணியம் [உதவித் தபாலதிபர்] ஆகியோரின் அன்பு மாமனாரும், சவுந்தரராசன், சவுந்தரகுமார், சவுந்தராதேவி, சவுந்தரநாதன், அன்பரசி, அன்பழகன், சுபா, ஈஸ்வரமோகன், செந்தூரன், சகிலா, அகிலன், குகப்பிரியன், றமணன், வத்சலா, அர்ச்சுனா, அட்சயன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 02 – 1996 ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானையில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
செ. ஞானசுந்தரம்
பொ. சுப்பிரமணியம்
(மருமக்கள்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

(40645)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 12-02-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org